# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௫ | மலர் |
| --- | --- | --- |
| ௩௯ | சோபகிருது, மாசி.<br>1964 மார்ச், ஏப்ரல், | ௯. |


## அறம் என்னும் பேராறு


புலவர் : திரு. நா. அறிவுஒளி.


உலகத்தை வெல்ல விரும்புவோர் தமக்குத் தாமே பல தோல்விகளை ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

நல்ல சான்றோர்களின் தோல்விகள் தான், உலகை வளர்த்து உருவாக்கும் நல்ல தொண்டுகளின் வெற்றிகளாகும். தங்களை வீழ்த்திக் கொண்டு சான்றோர்கள் தங்கள் கொள்கைகளை வாழ்த்தி வளரச் செய்கின்றனர்! இத்தகையோரைத்தான் தமிழ்ப்பாட்டு 'தமக்கென வாழார் பிறர்க்கென முயலுநர்' எனப் போற்றுகிறது. இத்தகைய சான்றோர்கள் தொகை நாட்டிலும், ஞாலத்திலும் மிகுதியாகவேண்டும். அப்போதுதான் வீழ்த்தப்படவேண்டிய தீமைகள் குறையவும், வாழவேண்டிய நன்மைகள் நிறையவும் வாய்ப்பமையும்.

நல்லறிஞர்களின் தோல்விகள் உண்மையான தோல்விகளல்ல. அறியாமக்களே அவற்றைத் தோல்விகள் என வெறித்துக்கூறுவர். உண்மையான—நீடு வாழும் வெற்றிகள் தோல்வியுறுவதைப் போலக் காட்டி, வெல்வது இயற்கையின் ஊழ் ஆகும்.

நாளுக்கு நாள் பல்லாயிரம் சீர்திருத்தங்கள் உலக மன்பதையில் உண்டாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இருந்தும், உலகினர் போதிய பண்பாடு எய்தவில்லையெனின் அஃது சீர்திருத்தத்தின் குறையல்ல; சீர்திருத்தக்காரர்களின் குறையுமல்ல; அஃது மக்கள் விலங்கின நிலையினின்றும் முழு அளவில் விடுபட இயலாத நிலையின் குறையே.

மக்கட்டன்மையை உணர்ந்து கொள்வது எளிய செயலல்ல. மக்கட்டன்மையை உணர்பவன் 'மாந்தன்' ஆவான். மற்றவரையும் மக்கட்டன்மையினர் என்று மதிக்கும் உணர்வு

நன்கு அத்தகைமையாளர்க்கு அமையும். இம் மாந்தர் உணர்வியல்பு வாய்க்கப் பெறுதற்கு முயல்வது கற்றோரின் கடமை, கடமை உணர்ந்தொழுகுவோர் எத்துணைப்பேர்?

மக்கட்டன்மையைப் பற்றி எழுதவும், பேசவும், பிறர்க்கு அறிவுரை கூறவும் செயற்படுகிற அளவில் ஓரளவாவது அதைப்புரிந்து கொண்டு செயலில் கடைபிடிக்க எடுக்கும் முயற்சி யிருந்தால் நன்றாக இருக்கும்.

உள்ளத்தை உருவாக்குவதுதான் உலகில் மிகப் பெருங் கலை. உள்ளத்தை உணராமல், அதுபற்றிக் கருத்தில்லாமல்—கவலையில்லாமல்—கிடப்போர் மிகப்பலர்! 'உள்ளம் ஆக்கம்' பற்றி ஆர்வமுடையோர் உண்மை வழிபாட்டின் இன்றியமை யாமையைத் தெள்ளிதின் அறியக்கூடும்.

ஆனால் ஒவ்வொரு துறையிலும் உலகம் முன்னேறியிருக்கிறதா? சில துறைகளில் மிக முன்னேறியுள்ளது உண்மையே! ஆனால்...?

மக்களின் உள்ளம் அழுகிக் கொண்டே போகிறது! ஆம் காசு!—அதன் செல்வாக்கும், திருவிளையாடலும் அளவிட்டுரைக்க முடியாத கொடுமை வாய்ந்து விளங்குகிறது. எத்துணைக்கயமை! எத்துணை மானக்கேடு! எத்துணை நாணங் கெடுக்கும் இழிவு! எங்கு நோக்கினும் கையூட்டு; கைக்கூலி! இதனை எள்ளி நகையாடும் சொல்லாகக் 'கிம்பளம்' என்ற புதுச்சொல்லையும் மொழிபெற்று விட்டது! அன்பளிப்பு, நன்கொடை, பரிசளிப்பு, அறம் என்ற பெயரில் எத்துணை நாணமற்ற—நேர்மையில்லாக் கையூட்டுகள் மன்பதையில் அமைந்து கிடக்கின்றன! பெருந்தகைமை வாய்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்பவரிலிருந்து, காவற்காரன்—பணியாள்—வரை கையூட்டு வாங்குவது 'தவறற்ற கடமை' யாக நிலவுகிறதே! இனி, 'கைக்கூலி' வாங்குவதும் 'ஓர் ஒழுக்கம்' என்று கூறக்கூடிய நிலையையும் மன்பதை உண்டாக்கி விடுமோ என அஞ்சுகிறேன். 'இப்பண்பாடற்ற கயமைச் செயல்கள் மாயவேண்டும்; கையூட்டை ஒழிக்கவேண்டும்' என்று மேடையில் பேசிப்பின் அதை ஓம்பிவர மறைமுகமாக உழைக்கின்றனர் அரசியல் துறையினரின் பொறுப்பின்மையால் தான் நிலை உண்டாகிவிட்டது. கயவர்களை உண்மையாகத் தேடிப் இனைய பிடித்துத் தக்காங்கு ஒறுக்கவேண்டும். ஆம் குற்றம் அதற்குரிய ஒறுப்பை அடையவேண்டும். அப்போதுதான் நேர்மை செல்வாக்கும் சிறப்பும் பெறும்.

ஏழைகட்காக, அவர்கள் நன்மை, முன்னேற்றம். உயர்வுக்காக அமைந்த இயக்கங்கள் என முழங்குபவை தெரிந்தோ தெரியாமலோ செல்வர்—முதலாளியர் கோட்டையாகவே

அமைகின்றன. கொள்கையளவிலும், பேச்சு-எழுத்தளவிலும் ஏழைகள்—உழைப்பாளிகள் நன்மை அடிமைப்படுகிறது. ஆற்றல் மிக்கோரின் முன்னேற்றத்துக்குப் பொதுமக்களுக்கே தொண்டுசெய்யப் பிறந்த இயக்கங்கள் பயன்படமுற்படுகின்றன. பல்லாயிரம் தொண்டர்கள், ஏழைகள், நடுநிலைக் குடியினர் முதலியோர் தம்மையறியாமலே தம் வளத்துக்குத் தடைசெய் வோர்க்கு உதவிசெய்கின்றனர்; ஏமாளிகளாக ஆகிவிடுகின்றனர். இந்த வஞ்சக நிலை அரசியலில் அமைவதைக் குறித்து யார் எண்ணிப் பொறுப்போடு செயல்படுகின்றனர்.

நாட்டு மக்களின் உள்ளத்தில் எவ்வாறே சில நஞ்சுணர்வுகள் வேர்பரந்து விட்டிருக்கின்றன. தன்னைப்பற்றிய-தன் வாழ்வைப்பற்றிய நினைவைத்தவிரவேறு நினைவற்றவர்கள் மிகுந்துவருகின்றனர், ஆயின், அத்தகையோர் பிறரைப்பற்றியும், பிறர் நலனுக்காகவுமே வாழ்ந்து, பேசி, எண்ணி இயங்குவதாக முழங்குவதில் முன்னே நிற்கும் நிலையையும் காண்கிறேன். சுருக்கமாக, உலகை—உள்ளமறிய—ஏமாற்றுகின்றனர்! இதை நன்ருகப் புரிந்து கொண்டும் உலகம் ஏமாந்து வருகிறதே; அங்கேதான் உலகின் போக்கு புதிராகவிருக்கிறது!

'அதோ, போகிருனே—அவன் ஒரு கடைந்தெடுத்த கயவன்! 'எனப்பேசுகிருர் ஒருவர். அதே ஆள் அந்தக் 'கயவனை' முகத்துக்கெதிரில், "இவர்போல ஒருவர் இருக்க முடியுமா? மிக நல்லவர்; வல்லவர்" எனப் புகழ்வார். இந்நிலை —இந்த மன்பதையில்—திறமையாக வாழ்வதற்கு இன்றியமையாதது என்று படித்தோரும் உள்ளங் கூசாமல், நாகூசாமல் கூறுகின்றனர்! கயமையின் செல்வாக்கு எவ்வளவு வளர்ந்திருக்கிறது! ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் அஞ்சக் கற்றுக் கொண்டுவிட்டான். உண்மையாக அஞ்சாவிட்டாலும் பொய்யாகப்—போலியாக — அஞ்சுவதுபோல நடிக்கக் கற்றுக் கொண்டான். இவ்வாறு போலியச்சம் 'அஞ்சவேண்டு மென்று எதிர்பார்க்கும் பெரிய மனிதர்களும் மிகுந்துவிட்டன. இந்த 'மனித அச்சம்' தான் தலைசிறந்த மடமை! கயமைகளுக்குள் தலைமைவகிக்கும் இந்தப் போலி வாழ்வு நிலை மன்பதையினின்றும் விடைபெற்றுச் செல்ல வேண்டும். இந் நிலை வளர்ந்தால் தன்னையே தான் நம்பாத நிலை மக்களுக்கு வரக் கூடும்!

நடைமுறை உலக வாழ்க்கையில் பலர் அஞ்சத்தக்க நண்பர்களாக உள்ளனர். முகத்துக் கெதிரில் நம்மைப் புகழ்ந்து பேசியும், நமக்கு அடிமைகளைப் போல நடித்தும் வருவர். நம் தலை மறைந்ததும் நம்மைப்பற்றி இழிவு பேசுவ

## 1 தமிழகத்திற்கப்பால்

K. G. கிருஷ்ணன், M.A. B.T., Dip. Geo., Dip, Anthoop.

துணர் ௩௮, பக்கம் ௨௨௮ன் தொடர்ச்சி

முன் விரித்துரைக்கப்பட்ட மூன்று கல்வெட்டுகளையன்றி தமிழகத்தின் செல்வாக்கு சாவகத்தீவு வரையில் தொடர்ந்து பரவிவந்தது என்பதற்குப் போதிய வேறு சான்றுகள் கிடைக்கின்றன. மேல் மூன்றாவதாகச் சொல்லப்பட்ட கல்வெட்டு பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததென்று கண்டோம். அதற்கடுத்த நூற்றாண்டில் சாவகத்தீவில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் சில தமிழகத்தின் செல்வாக்கை மறைமுகமாகப் பறைசான்றுகின்றன. சாவகத்தீவில் துகனரு என்ற ஒரு ஊரில் கண்ட கல்வெட்டு அன்று ஆண்ட அரசனின் பெயரை ஸ்ரீ வீரகண்ட கோபால ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவாதீசுவர நாம ராஜாபிஷேக விக்ரமோத்துங்க தேவ' என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு சகவருஷம் 1245, மார்கசீர்ஷம, சுக்கில பக்ஷம் 15, செவ்வாய்க்கிழமை, ஆர்த்ரா அதாவது ஆதிரை என்ற நாளில் நிகழ்ந்த செய்தியைத் தாங்கியுள்ளது. திருவாளர் எம். ஸி. எல். தமே என்ற பிரெஞ்சு அறிஞர் அந்நாளை கிறிஸ்து ஆண்டு 1323, டிசம்பர் 15-ம் நாளாகக் கொண்டிருக்கிறார்! ஆனால் டிசம்பர் 13-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகும். கல்வெட்டில் குறிப்பிட்ட செவ்வாய்க்கிழமை ஆகாது. ஆகவே அது 1323 ம் ஆண்டு நவம்பர் 13 ம் நாள் ஆகும் என்பதை திரு. சுவாமிக் கண்ணு பிள்ளை அவர்களின் Indian Ephe meris என்ற புத்தகத்திலிருந்து தெளியலாம். 'Bhitar' என்ற மற்றொரு ஊரில் கண்ட கல்வெட்டு' அவ்வரசனையே சுந்தரபாண்டிய தேவன் என்றே குறிப்பிடுகின்றது. சகவருஷம் 1246 ஐச்சார்ந்தது.

எனவே தெலுங்கச் சோழ வம்சத்தைச் சேர்ந்த ஒரு சிற்றரசனாகிய வீரகண்ட கோபாலனின் பெயரையே அவனுடைய எதிரியையும் அக்காலத்தே பேரரசு நாட்டிய பாண்டியர் குலத்துப் பெருமன்னனும் ஆகிய முதல் சுந்தரபாண்டியன் பெயரையும் தன் பட்டப் பெயராகிய விக்ரமோத்துங்க தேவன் என்பதனையும் ஒருங்கே கொண்ட ஒரு நீண்ட பெயர் தாங்கிய அரசன் சாவகத்தீவில் செங்கோல் செலுத்தி வந்தான் என்பதை நாம் அறிகின்றோம். வெறும் பெயரொற்றுமை ஒன்றே பொருந்திய சான்றாக இதனைக் கொள்வதற்

1 Bulletin De C'Ecole Francaise D'Extreme-Orient, Vols. XLVI and XLVII.

கில்லை. நெடுநாள் தொடர்பின் பயன் என்பதை இப்பொழுது உறுதியாகச் சொல்லலாம். இதன் உண்மைநிலை இன்னும் ஆராய்தற்குரியது.

இனி இப்பரந்த பாரத நாட்டின் பகுதிகளில் தமிழ்பேசும் மக்கள் வாணிபம் கருதிச் சென்றிருக்கிறார்கள் என்பதை அப்பகுதில் காணப்படும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. ஆந்திரநாட்டில் பீமலிபட்டணம் தாலுகாவில் ராவாடா என்னும் ஊரில் தெருவில் நடுவில் நிற்கும் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்க்கல்வெட்டு மலைமண்டலத்து வியாபாரியான உத்தம கங்கதன்ம செட்டி அநந்தவர்ம தேவனின் 65ம் ஆட்சியாண்டில் (கி. பி. 1142) ஒரு திருநந்தா விளக்குக்காக ஐந்த மாடை பொன் வழங்கியதாக அறிவிக்கின்றது. விசாகப் பட்டிணத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டு பந்தலாயினிக் கொல்லத்தைச்சேர்ந்த கண்டன் சந்திரைய செட்டியார் என்பவர் சகவருஷம் 1172 ஆம் ஆண்டு அதாவது வீரநாரசிங்க தேவனின் 15 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1250-51) குலோத்துங்க சோழ பட்டினம் என்ற மறுபெயர் கொண்ட விசாகப்பட்டினத்தில் கருமாணிக்காழ்வாருக்கு ஒரு சனிவார மண்டபம் கட்டுவித்த செய்தியைத் தமிழில் அறிவிக்கின்றது. [2]பந்தலாயினிக்கொல்லம் என்பது கேரளத்தில் குறும்பர நாட்டுப் பகுதியில் கோயிலாண்டி (Quilandi) என்ற ஊரே ஆகும். கேரளத்தில் தெற்கே உள்ள கொல்லம் (Quilon) என்ற ஊரினின்றும் வேறுபடுத்தவே பந்தலாயினி என்ற அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கின்றது. தெற்கே உள்ள கொல்லம் குரக்கேணிக் கொல்லம் என்று கல்வெட்டில் குறிக்கப்படும். இக்கல்வெட்டில் சுட்டப்பட்ட வீரநாரசிங்கதேவன் கங்கவம்சத்தைச் சேர்ந்தவன். விசாகப்பட்டினத்தில் கண்ட மற்றொரு தமிழ்க்கல்வெட்டு [3] சகவருஷம் 1012 இல் (கி. பி. 1080) அந்நகரத்தார் மாதோட்டமான சோழகுல வல்லி பட்டணத்து வியாபாரி ஒருவனுக்கு ஐந்நூற்றுவப் பெரும் பள்ளி என்ற ஒரு நிறுவனத்திற்கு நன்கொடை வழங்கும் காரியத்திற்காக நிலம் விற்ற செய்தியைத் தெரிவிக்கின்றது. இப்பள்ளி பெரும்பாலும் ஒரு பௌத்தப்பள்ளியாக இருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு. வணிகமக்களின் தொடர்பால் முன்குறிப்பிட்டபடி ஆயிரவர் ஐநூற்றுவர் என்ற தொகைச்சொல் அப்பள்ளிக்கு இப்பெயரை ஏற்படுத்திய

---

1 கல்வெட்டிலாகா ஆண்டறிக்கை, 1958—59. பி—110

2 மேற்படி அறிக்கை. 1909, எண் 98

3 ,, ,, எண் 100

4 தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி 10. எண் 651.

5 ,, தொகுதி 6, எண் 1214

தெனலாம், இக்கல் வெட்டின் மறுபக்கத்தில் இதன் தெலுங்கு மொழி பெயர்ப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது.[4] மேற் குறித்த வீரநாரசிங்கதேவனின் 22 வது ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு[5] திராக்ஷாராமத்தில் மலைமேல் மண்டபத்துக் கருகில் உள்ள கல்லில் காணப்படுகிறது. அது சோழமண்டலத்தில் விருதராச பயங்கரபுரம் என்ற மறுபெயர் கொண்ட திருவாவடுதுறை வியாபாரி சிறுபண்டூர் கிழவன் பெற்றான் இராசேந்திர சோளீசுவர முடையான் மலர் மாலை சாத்தியதை அறிவிக்கிறது. இக்கல் வெட்டில் வேறு சொற்றொடரும் காணப்படாததால் இதில் குறிக்கப்பட்டுள்ளது அன்று சூடி மறுநாள் களையப்பெறும் வெறும் மலர் மாலை அல்ல, விலை உயர்ந்த தங்க மலர்மாலையே யாகும். என்பது அறியக்கிடக்கின்றது. இக்கல்வெட்டின் அருகே காணப்படும் மற்றொரு தமிழ்க்கல்வெட்டு சக ஆண்டு 1088 இல் சித்திரை மாதத்தில் (கி. பி. 1166) கண்ணன் கண்டன் என்ற ஒரு வியாபாரி 20 ராசநாராயணன் மாடை நாணயங்களை வழிபாட்டுச் செலவுக்காகக் கொடுத்த செய்தியைக் கூறுகின்றது.

இதுவரைகண்ட ஆந்திர நாட்டுத் தமிழ்க் கல்வெட்டுக்கள் வாணிபம் கருதி அவ்வழி சென்றவர்கள் 12ம் நூற்றூண்டில் செல்லத் தலைப்பட்டமை அறியப்படுகின்றது. அதற்கு முற்பட்ட காலத்தில் வாணிபத் தொடர்பு இல்லையென்று கொள்வது தகாது எனினும் 12 ம் நூற்றூண்டுக்குச் சற்று முற்பட்டுத் தமிழ்நாட்டுக்கு வேங்கி, கலிங்க நாடுகளுடன் ஏற்பட்ட அரசியல் உறவுக்கும் இவ்வாணிபத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருத்தல் கூடும் என்பது தெள்ளிது. முதல் ராசராச சோழன் காலத்திலிருந்து கீழைச்சளுக்கியர்க்கும் சோழர்க்கும் ஏற்பட்ட உறவுமுறை நாம் அறிந்ததே. ராசராசனின் மகள் குந்தவை சளுக்கி விமலாதித்தனை மணந்ததும் அவர்களுக்குப் பிறந்த ராசராச நரேந்திரன் முதல் ராசேந்திரனின் மகள் அம்மங்கதேவியை மணந்ததும் இவர்களுக்குப் பிறந்த ராசேந்திரன் என்ற குலோத்துங்கன் இரண்டாம் ராசேந்திரனின் மகள் மதுராந்தகியை மணந்ததும் வரலாறுகண்ட செய்திகள். வீரராசேந்திரன் மகள் ராசசுந்தரியை அனந்தவர்மன் மணந்தான் என்றும் கருதப்படுகின்றது. ஆக மூன்று தலைமுறைகளாக மணவினை வாயிலாகவே அரசியல் தொடர்பு கொண்ட காரணத்தால் முன்னமேயே இயல்பாகவே இருந்த வாணிபத் தொடர்பு உறுதி பெற்றிருத்தல் கூடும்.

(தொடரும்)

1 தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்: தொகுதி 10, எண் 1215,

# செந்தமிழ்-கொடுந்தமிழ்

தி. வெங்கட்ராமன் பி. ஏ., பி. டி.

செந்தமிழ் என்பது செந்தமிழ் நிலத்தில் வழங்கும் மொழி, இது பழந்தமிழ், இலக்கியத்தமிழ், திருந்தியதமிழ், பொதுமொழி என்பர். கொடுந்தமிழ் என்பது கொடுந்தமிழ் நிலத்தில் வழங்கும் மொழி. இது பேச்சுத்தமிழ், திருந்தாத தமிழ், புதுமைத்தமிழ், கிளைமொழி என்பர். இச்செந்தமிழ், கொடுந்தமிழ் பற்றி அறிஞர்களிடையே பலவேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

**தொல்காப்பியர் கருத்தும், உரையாசிரியர்கள் மாறுபாடும் :—**

ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியர் காலத்தில் செந்தமிழ், கொடுந்தமிழ் பாகுபாடு கிடையாது. செந்தமிழ் நிலம் எனவும் அவர்தம் இலக்கண நூலில் குறிக்கவில்லை.

---

முதல் பக்கத் தொடர்ச்சி

தோடு அமையாது தீங்கு செய்யவும் முற்படும் நிலைமையைக் காணும்போது யாரை நம்புவது என்றே புரியவில்லை. நண்பர்கள் நிலையே இதுவானால்; பகைவர் என்னதான் செய்ய மாட்டார்கள்? கோழைத்தன்மை வாய்ந்த இத்தகு நண்பர்களைச் சீர்திருத்தவும் இயலாதோ என்றும் உள்ளம் வாடும். படித்தவர்களிலும் இத்தகையோரிருப்பதே இரங்கத்தக்க நிலை !

காலங்கடந்தும் நல்லபண்பு வாழும்; சிறப்புபெறும். ஆனால், தீயபண்பு என்றும் சிறப்புறுவதில்லை. ஆகவே மறவினைகள் வெற்றி பெறுவனபோல் தோற்றினாலும் உண்மையில் வெல்லப் போவதில்லை. அறம் நிலை பேறுடையது; அழியாதது; அழிக்க முடியாதது; ஆற்றல் சான்றது. அதன் வெற்றிக்கு யாரும் ஊறுசெய்துவிட முடியாது. சிலரின் திர்ப்புக்களும், முடிவுரைகளும், நம்பிக்கைகளும் முதுமைசான்ற உயர்பேரறத்தை அசைத்துவிட முடியுமா? சிலர் தீர்ப்பே, உலகத்தின் மாறாத தீர்ப்பாகி விடுமா ?

வாழ்க்கை தேங்கிநிற்கும் குட்டையன்று, அஃது ஞாலப் புலவர் பூங்குன்றனார் கூறியாங்கு, 'கல்பொருதிரங்கும் மல்லற் பேரியாறு'! அதன் ஓட்டம் தவிர்க்கவோ, தடைசெய்யவோ; அணையிடவோ முடியாத தனிச்சீர் நிலைமையது. ஆம். அறப் பேரியாற்றின் நெடுவழிச்செலவு நம்மோடு முடிவதில்லை. அஃது இயற்கையைப் போல என்றும் இயங்கிக் கொண்டிருப்பது.

"அவற்றுள்
இயற்றுசொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணிப்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே"
(தொல், சொல்)

என்றும்,

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப்பினவே திசைச் சொற் கிளவி"
(தொல், சொல் 400)

என்றும் தொல்காப்பியனர் கூறும் சூத்திரங்களால் செந்தமிழ் நிலம் என்றும், செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் என்றும் பகுத்த பாகுபாடு மட்டும் பண்டு இருந்தமை அடுயப்படும்.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் 398 ஆம் சூத்திரத்திற்குச் சேனவரையர் உரையெழுதுங்கால் இயற்சொல் என்று சொல்லப்பட்ட சொல்தாம், செந்தமிழ் நிலத்து வழக்காதற்குப் பொருந்திக் கொடுந்தமிழ் நிலத்துந் தம்பொருள் வழுவாமல் உணர்த்தும் சொல்லாம் என எழுதியுள்ளார்.

செந்தமிழ்நாடு ஒன்று; அதைச் சார்ந்த கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டு, எனத் தொல்காப்பியர் கூறியதாகப் பொருள் கொண்டு.

"தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு—நன்றுய
சீதமலாடு புனனுடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிரு நாட்டென்"

எனவும் அந்நாடுகளின் பெயர்களையும் கூறினர் உரையாசிரியர்.

செந்தமிழ் நிலம், கொடுந்தமிழ் நிலம் என்று இரண்டாகப் பகுத்துரைப்பதற்குத் தொல்காப்பியத்திலேனும், அதனேடொத்த முன்னூல்களிலேனும் சான்றுகள் ஒன்றும் இல்லை. செந்தமிழ் நிலம் என்று தொல்காப்பியத்தில் உள்ள செம்மை என்ற விசேடணமே கொடுந்தமிழ் நிலம் வேறு ஒன்றைக் கொண்டதற்கு மூலமாயிற்று என்பர். தொல்காப்பியம் கூறியதை நாம் இனம் சுட்டாப் பண்படைச் சொல்லாகவே ஆளவேண்டும் என்பர். பிற்காலத்து உரையாசிரியர்கள் தவருகக் கருதி செந்தமிழ், கொடுந்தமிழ் எனவும்' செந்தமிழ் நாடு, கொடுந்தமிழ் நாடு எனவும் பாகுபடுத்தி எழுதியுள்ளார்கள். இப்பகுப்பு அந்நூலாசிரியர் காலத்துக்கு ஏற்புடையது அன்று.

சிலப்பதிகாரத்தின் இறுதியில் உள்ள 'நூல் கட்டுரை' யுள் 'தண்டமிழ் வரைப்பின் செந்தமிழ், கொடுந்தமிழ் என்றிரு பகுதியின்' என்ற அடிகளில் கொடுந்தமிழ் பயில்வதன்றி வேறு சொல் முன்னூல்களில் காணுதல்மிக அரிது.

செந்தமிழ், கொடுந்தமிழ்ப்பற்றி உரையாசிரியர்கள் கருத்துக்கள் :

" சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்தர பாண்டிய னெனுந் தமிழ் நாடனுஞ்
சங்கப்புலவருந் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநாடு"

செந்தமிழ் நிலம் என்றும் அந்நாட்டின்கண் வழங்கும் மொழியே செந்தமிழ் என்றும் கூறுவர் சிலர்.

" மன்றவாணன் மலர்திரு வருளால்
தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவரும் தழைத்தினி திருக்கும்
மையறு சோழ வளநாடு"

செந்தமிழ்நிலம் என்றும், அந்நிலத்தின்கண் வழங்கும் மொழியே செந்தமிழ் என்றும் கூறுவர் சிலர்.

மயிலைநாதர். யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்கினியர், போன்றோர் வைகையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் அமைந்தநிலம் செந்தமிழ் நிலம் என்றும், அந்நிலத்தின்கண் வழங்கும் மொழியே செந்தமிழ் என்பர்.

நச்சினார்க்கினியார் போன்றோர் மதுரை வட்டாரம், சோழ நாடு இவை ஒழிந்த பிறநாடுகள் கொடுந்தமிழ் நாடுகள். அந்நாடுகளில் வழங்கும் மொழி கொடுந்தமிழ் என்பர். வேங் கடம், குமரிக்கு அப்பால் வழங்கும்படியான தமிழ் கொடுந் தமிழ் என்பது தெய்வச்சிலையார் போன்றோர் கருத்து.

இங்ஙனம் செந்தமிழ் கொடுந்தமிழ் பற்றி உரையாசிரியர் களிடையே வேறுபட்ட கருத்துக்கள் நிலவுவதைக் காணலாம்.

கால்டுவெல் கருத்து :—

செந்தமிழ் என்பது தமிழ்மொழியின் இலக்கியத் தமிழ் ஆகும். செந்தமிழே தனித்தமிழும் பழந்தமிழும், இயல் தமிழும் ஆகும். 'செந்தமிழ்' என்ற பெயர் பெறும் தமிழ் அம்மொழி வழங்கும் மக்களின் பேச்சு நடையிலிருந்து மட்டும்

வேறுபடாமல், இலக்கண ஆசிரியர்களால் 'கொடுந்தமிழ்' என்ற பெயரின்கீழ் தொகுக்கப்பெறும் தமிழிலிருந்து வேறு பட்ட வழக்குடைய திசைமொழிகள் பன்னிரண்டிலிருந்து வேறுபடுகின்றன என அவர் குறிக்கின்றார்.

**இன்றைய அறிஞர்கள் கருத்துக்கள் :**

பொதுமொழி (Standard Language) வேரூன்றியிருந்த நாடு செந்தமிழ்நிலம். அதிலிருந்து வேறுபட்டுக் கிளை மொழிகள் செழித்திருந்த தமிழ்நாட்டுப் பகுதிகள் கொடுந் தமிழ்நிலம். தமிழகத்துக்குள்ளேயே வழங்கும் கிளைமொழிகள் கொடுந்தமிழ். பிறஎல்லாம் செந்தமிழ் என்பது டாக்டர் மு. வ. பன்மொழிப்புலவர். தெ. பொ. மீ. போன்றோர் கருத்து. பிறதிராவிட மொழிகளே கொடுந்தமிழ் என்று பாவாணர் கூறுகின்றார்.

" வடவேங்கடத் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்" த்தைச்'சார்ந்த பன்னிரு

நாடுகள் என்பவை வேற்றுமொழிகள் வழங்கும் கடாரகம், சிங்களம் முதலிய பன்னிரு தேயங்களே. இவற்றின் வேறாய தென்பாண்டி குட்டம் குடம் முதலிய பன்னிரண்டும் செந் தமிழ் நிலமான தமிழகப் பகுதிகளே. பன்னிரு நாடுகளை யுடைய தமிழக முழுவதுமே செந்தமிழ் நிலம். அந்நிலத்தில் வழங்கும் மொழி செந்தமிழ் மொழி கொடுந்தமிழ் என்ற ஒன்று செந்தமிழ் நாட்டில் இல்லை. கொடுந்தமிழ் வேறுநாட்டில் வழங்கும் மொழிகளே என்பர் சிலர்.

இவர்கள் கருத்துக்களை நோக்குமிடத்து செந்தமிழ் கொடுந்தமிழ் என்ற பாகுபாடு உண்மை எனத் தெரிகிறது. தமிழ் நீண்டகால வாழ்க்கை உடையதால் பலபடி வளர்ச்சி யைக் காணமுடிகிறது. பழந்தமிழோடு ஒப்பிடும்போது இன் றைய தமிழ்வேறுபடுகிறது. இப்பெரும் வேறுபாடு செந் தமிழ், கொடுந்தமிழ் பாகுபாடு உண்மைஎன்று ஆக்கி யுள்ளது.

தமிழ் வாழ்க

# " அச்சம் "

(ச. பாலசுந்தரம்)

## தமிழ்த்தாய் வாழ்த்து :—

1 எழுத்தங்க மாக இயலிசை நாடகம் ஏய்ந்துருவாய்ப்
பழுத்தெங்கு மோங்கப் பலகலை ஈன்றநற் பைந்தமிழ்ச்சீர்
வழுத்துங் குதலை மொழிமாந்தி உள்ளம் மகிழ்சிறந்து
முழுத்துங் கொடுக்கும் முழுமுத லன்னையெம் முத்தமிழே!

## வணக்கம் :—

2 விஞ்சுபுகழ் அச்சமெனும் வீறுதவழ் அஞ்சுவையை
விரித்துப்பாட
மஞ்சுதவழ் வான், பெருந்தீ மண்காற்று நீரிலைதம்
மயக்கத்தாலே
கொஞ்சுபொருள்யாவையுமக் குணங்களொடு கூட்டிடமுக்
கூறுகிப்பின்
அஞ்சுருவாய் விரிந்தறிவா யகம்புறமாய் ஒளிர்தமிழ்த்தா
யடிகள்போற்றி

3 எத்திக்குந் திரையுலகக் கவியரசென்றியம்ப எழில்
எளிமைமேவித்
தித்திக்குஞ் செந்தமிழால் சிறுவரொடு கல்விமிகு
சிந்தையாளர்
புத்திக்கும் பொருந்தநறும் தேன்கவிதைமழை பொழியும்
புலமையாள
கத்திக்கிங் கியலாத புரட்சி,கவியாலியற்றுங் கண்ணதாச!

4 கவியரங்கிற் கலந்துசுவைக்கவியமுதம் படைத்தருளுங்
கலைவல்லீர்காள்
செவியிரங்க மடுத்துண்ணச் சேர்த்தவையைச் சார்ந்துபுகழ்
சேர்க்கும் சான்றீர்!
புவியரங்கிற் கவியரங்கமெனத்திகழும் தமிழ் நாட்டின்
பொலிவைக்காட்ட
கவியரங்கம் கூட்டிய பேரவையிர்தாள் வணங்குகிறேன்
கரம் குவித்தே.

## வருபொருள் :—

5 எண்சுவையும் கற்றேர்கள் எண்சுவையாய்ப் புவியகத்தும்
இலக்கியத்தும்
ஒண்சுவையாய் ஒளிர்வதனை உலகியலால் நாடகத்தால்
உணர்ந்தும் அந்த

வண்சுவையின் வாழ்வினையும் மாண்பினையும் இலக்கியத்துள் வளர்த்தாரில்லைப்
புண்சுவைசேர் உரைமிகுத்தார் புலவர்சிலர் எனத்தலைப்பும் புகன்றீர்போலும்

6 சொல்லரும்பால் தமிழ்மாலை தொடுக்கும் நல்லோர்
சூழ்ந்திருக்குங் கவியரங்கில், ஈரமில்லாக்
கல்லெடுத்து மாலைகட்ட அஞ்சுகின்றேன்
கல்லாமற் கவிபாடக் காதல் கொண்டு
புல்விளைத்து நெல்லென்பார் போல ஆழ்ந்த
பொருளில்லாக் கவிபுனைய அஞ்சுகின்றேன்.
பல்லிருந்தும் மெல்லாமல் விழுங்க எண்ணிப்
பதைத்துண்டால் விக்குமென அஞ்சுகின்றேன்.

7 கீரரொடு கபிலர்தமிழ்ப் பரணர் சாத்தர்
கெழுதகுமுத் தமிழிளங்கோ கொங்கு வேளிர்
ஏரொழுகுந் திருத்தக்க தேவர் கூத்தர்
இன்கவிதைக் கேருன கம்பர்—தெய்வச்
சீரொழுகுந் தேன்கவிதைச் சேக்கிழார், சொற்
செயங் கொண்டார், கற்பனைக்கார் சிவப்ரகாசர்
ஆரமுதக்குமரகுரு பரரென் றின்ன
அருளறிவுக் கவிஞர்பிறந் தொளிரும் நாட்டில்

8. அடியேனும் கவிஞனென அஞ்சுகின்றேன்
அறிவேனும் திறமேனும் சிறிது மின்றிப்
படியேறிப் பாப்புனையப் பதைக்கின் றேன்என்
பைந்தமிழ் மாசுறுமோவென் றஞ்சுகின்றேன்
வடியாத புன்சொல்லால், உள்ளீடின்றி
வளரிசையோ டணியின்றி யாப்புமின்றிக்
கடிதேறும் உணர்வின்றிக் கவிதை என்று
காளானை விளைக்கமிக அஞ்சுகின்றேன்.

9 அவையஞ்சிப் பிதற்றுகிறேன் அல்லேன்'தூய
அருந்தமிழின் சுவைஎட்டுள் ஆற்றல்சான்ற
சுவை'யச்சச் சுவை' இதனைச் சுருக்க மாகத்
தொன்னூற்கு முரணின்றி அணிவிளங்க
நவையின்றி எவ்வாறு நவில்வ தென்னும்
நல்லுளத்தால் நாவசைக்க அஞ்சுகின்றேன்
கவைதாவார் புறங்கூற்றிற் கஞ்சேன் காட்டில்
களிறிருக்கும் சிறுமுயலும் கலந்திருக்கும்

10 ஒப்பில்லா அச்சத்தின் உயர்வைப் பன்னாள்
உரைத்தாலும் கைமுகந்த கடல் நீரொக்கும்
இப்புவியின் இயக்கமெலாம் அச்சத்தாலே
இயற்கைப்பண் பச்சந்தான்—அச்சமின்றேல்

எப்பொருட்டும் வளர்ச்சியிலை இன்பமில்லை
இறையுணர்வும் இல்லை எழில் ஒழுக்க மில்லை
துப்புடைய வீரரெனும் தோற்றமில்லை
துலங்குமிலக்கியங் களொடு கலையும்இல்லை.

11 அச்சமே அச்சம் இந்த உலகெலாம் அச்சம் அச்சம்
துச்சமாம் உலகென் பார்க்கும் சொல்லிலே அச்சந்தூங்கும்.
எச்சமாம் பொருளென் பார்க்கும் இதயத்தில் அச்சம்நிற்கும்
நிச்சமும் அஞ்சி அஞ்சி நிலத்துயிர் வாழும் அம்மா!

12 அணங்கொடு விலங்கேகள்வர் தம்மிறை இவற்றால் அச்சம்
கணங்கொளும் என்றுநம்,தொல்காப்பியர் புகன்றார் இங்கே
வணங்கியும் நிமிர்ந்தும் பாய்ந்தும் வாழ்தல்நம் அச்சத்தாலே
குணங்களுள் சுவையுள் அச்சம் கொடுமுடி யாகும் அம்மா!

13 ஆயிழையாரின் பண்புள் அச்சமே முதலாம் என்பார்
காயுமோர் கதிரும் வானும் கடலொடு நெருப்புங் காற்றும்
சேயுயர் இடியும் மின்னும் தெய்வமாம் அச்சத்தாலே
பேயொடு பூதம் யாவும் பிறந்ததிங் கச்சத்தாலே.

14 விண்ணைப் பிளக்குது மின்னல்—ஒளி
வீசுது கூசுது நம்மிரு கண்கள்
கண்ணைப் பறிக்குது செந்தீ—அந்தக்
காலக்கடவுளின் பேய்ச்சிரிப் பீதோ?
மண்ணைச் சழற்றுது காற்று—மாட
மாளிகை கோபுரம் யாவுமே தூள்தூள்
பண்ணை மரங்களும் காடும்—சாய்ந்து
படபட வென்று முறிவதைக் கேளீர்.

15 திடமொடு பேய்ப்புயற் காற்று—விண்ணிற்
சீறுதுசீறி அலைக்குது பாரீர்
கடகட திடுதிடு சட்டார்—என்று
காதுசெவிடு படும் இடி யேறு
மடமட குபுகுபு வென்றே—கடல்
மண்ணைவிழுங்க முழங்குது சீறி!
படகுகவிழ்ந்தன ஐயோ—எங்கு
பார்ப்பினும் நீரலை பேரலை வெள்ளம்

16 பூமிவெடித்த தெங்கெங்கும்—அந்தப்
பூகம்பத்தாலே நடுங்குது விண்ணும்
சாமி கடவுளே ஐயோ—தரை
தாங்க வொண்ணாத நெருப்புப்பிழம்பு
தூமிபடச் சுடர்தோன்றி—எங்கும்
சுற்றிச் சுவாலைகள் வீசி வளைத்தே
தீமிதி தீமெனப் பொங்கி—வானம்
செக்கச் சிவந்தது செந்நெருப்பாலே

17 என்றநிலை புலகுற்றால்—உள்ளம்
இம்மென அஞ்சித் துடித்து நடுங்கும்
கொன்று வரும்புலிக் கூட்டம்—அந்தக்
கொல்லைப் புறத்தில் குமுறுதல் கேட்டால்,
முன்றினிலே பெரும்பாம்பு—தலை
முங்கிப் படமெடுத் தாடுதல் கண்டால்
நின்றிடு மேசிறு மூச்சும்—அச்சம்
நெஞ்சில்விளைந்து குமிழிட்டுப் பொங்கும்.

18 அச்சந்தான் கீழ்களது ஆசாரம் என்றார்
ஆன்றதமிழ் வள்ளுவனார் அதைமறந்தால்
எச்சத்தால் கயமைமிகும் மேலும் சான்றோர்
இப்புவியில் அஞ்சுவதற் கஞ்சு கென்றார்
நிச்சந்தான் கொல்வறுமைக் கஞ்சவேண்டும்
நிறைகல்வி இல்லாமைக் கஞ்ச வேண்டும்
அச்சொத்தார் மக்களைப்போல் கயவர் என்றால்
அஞ்சுவதஞ் சாமைபே தைமையே அன்றோ?

19 ஓரறிவு முதலிண்(டு) ஆறறிவு கொண்ட
உயிர்கள் யாவற்றிற்கும் அச்சம் உண்டு
பாரில்ஒரு செடி தொட்டால் சுருங்கிக் கொள்ளும்
பதுங்கியிரு ஒட்டினுள்ளே கிளிஞ்சில்வாழும்
ஊருமுயிர் புற்றினிலே ஒடுங்கிக் கொள்ளும்
ஒவ்வொன்றும் கூடுகட்டி மறைந்து வாழும்
தேரினவை குழுவாகத் திரியும், வானில்
சிறகெழுப்பும் பறவைகளும் சேர்ந்தே செல்லும்

20 அரணமைத்துக் கோட்டைகட்டல் அச்சத்தாலே
அரைவீட்டைத் தாழிடுதல் அச்சத்தாலே
இரும்பெடுத்துக் கருவிசெய்தல் அச்சத்தாலே
இணையாக வாழ்வதெலாம் அச்சத்தாலே
விரும்பாமல் மருந்துண்ணல் அச்சத்தாலே
வேண்டும் அரசாட்சிஎனல் அச்சத்தாலே
துரும்பெனினும் விழிகாக்க இமைகள் மூடும்
துயர்வருமென்றெண்ணுவதே அச்சந்தானே?

21 பொருள் படைத்தார் கள்வர்களுக் கஞ்சுகின்றார்
புகழ்படைத்தார் பட்டிகளுக் கஞ்சுகின்றார்
அருள்படைத்தார் பாபத்திற் கஞ்சுகின்றார்
அழகுடையார் காமுகரை அஞ்சுகின்றார்
இருள்மனத்தார் உண்மையொளிக் கஞ்சுகின்றார்
எளியவெலாம் வரியவற்றிற் கஞ்சிநிற்கும்
உருள்ஞாலத் தோருயிர் மற்றொன்றை யஞ்சி
உறவாடும் அன்றியதை அழித்துமாயும்

22 குறைவளர்ந்து விடுமோவென் றரசுக்கச்சம்
கொள்கையழிந்திடுமோவென் றறிஞர்க் கச்சம்
நிறையழியு மோவென்று மகளிர்க் கச்சம்
நிலைமாறி விடுமென்று செல்வர்க்கச்சம்
மறையழிந்து விடுமெனவை தீகர்க்கச்சம்
மதியழிந்து விடுமோவென் ருசாற்கச்சம்
முறையழியுமோ வென்று பழையோர்க் கச்சம்
முன்னேற்றங்குறைமோவென் றறிவோர்க் கச்சம்

23 இலகுமொரு ஏழ்மையறி யாமை தீர்ந்தால்
ஏய்ப்பவர்க்கு வாய்ப்பின்றிப் போமென்றச்சம்
வலமிகுந்து பொதுவுடைமை வளர்ந்தால் தங்கள்
வளங்குறையும் என்றுமுத லாளிக்கச்சம்
சிலரிடையே பொருள்குவிந்தால் தேசமெங்கும்
தீயபகை யாமெனப்பாட் டாளிக் கச்சம்
உலகமெலாம் வளமுற்ருல் பிறருழைப்பால்
உண்டுகொழுப் பார்வாழ்வு கெடுமென்றச்சம்

24 இந்தியினல் தமிழ்கெடுமென் றெம்மோர்க் கச்சம்
இயங்குமொழி பதினன்கும் ஆட்சிபெற்ருல்
இந்திமொழியாளர்அதி காரம் குன்றும்
என்றவருக் கச்சம்,இனி இழிந்தசீனர்க்(கு)
இந்தியரின் நடுவுநிலைக் கொள்கைக் கச்சம்
இணக்கமிலாச் சீனர்களால் உலகுக்கச்சம்
அந்தமுறும் உலகம் அணுக் குண்டால் என்று
மன்பதைமேல் அன்புடையார்க் கச்சம் என்னே!

25 இருளஞ்சி விளக்கேற்றிக் கொள்ளுகின்ருர்
இறப்பஞ்சி ஊண் உறையுள் தேடுகின்ருர்
செருவஞ்சித் திறையளந்து சிறுமை கொள்வார்
தேர்வஞ்சி மாணவர்கள் ஓதிநிற்பார்
மருளஞ்சி நிறைகல்வி பயிலு கின்ருர்
மழையஞ்சிக் குடைபிடிப்பார், மறுபிறப்பாம்
கருவஞ்சித் துறந்துதவம் புரிகின்ருர்கள்
கலியஞ்சி நல்லோர்கள் நமறைகின்ருர்கள்

26 இயங்குகின்ற மண்ணுலகில் குணங்க ளெல்லாம்
இருமுறையால் இயங்குவதை அறிஞர் காண்பார்
வயங்குகின்ற முகமொன்று முதுகொன் ருகும்
வாழ்விலிவை கலந்தினிமை பயத்தலாலே
மயங்காதீர் மாண்புதரும் அச்சம் ஒன்று
மாண்பழிக்கும் அச்சம்ஒன் றிரண்டும் வேறே.

27 பகைக்கஞ்சேல் பழிக்கஞ்சு பரமற்கஞ்சு
படைக்கஞ்சேல் பாபத்திற் கஞ்சு தீயோர்
நகைக்கஞ்சேல் நவைக்கஞ்சு நல்லோர்க்கஞ்சு
நலிவஞ்சேல் நறவஞ்சு நாகுக்கஞ்சு
புகையஞ்சேல் பொய்க்கஞ்சு புரட்டுக்கஞ்சு
புலிக்கஞ்சேல் போலிகளுக் கஞ்சு தீயோர்
தொகைக்கஞ்சேல் தூய்மைகெடின் அஞ்சு—நாளும்
துயர்க்கஞ்சேல் தொல்லோர்வாய் மொழிகட்கஞ்சு

28 சினப்பொருநர்க் கஞ்சேல் தீவினைகட்கஞ்சு
சிறுமைவரின் அதற்கஞ்சு செல்வர்க் கஞ்சேல்
தனக்குவரும் துயர்க்கஞ்சேல் தாய்நாட்டிற்கும்
தாய்மொழிக்கும் மாசுவரின் தாங்க அஞ்சு
மனக்கவலைக்கஞ்சேல் மன்பதைக்குத் தீங்கு
வந்திடுமேல் அஞ்சுக! பொல்லாங்கிற்கஞ்சு
வினைக்கஞ்சேல் வினுரைகள் பேச அஞ்சு
விலைமாதர் தமக்கஞ்சு தோல்விக் கஞ்சேல்

29 கொலையினுக் கஞ்சு சூதின் கொடுமைகட் கஞ்சு சாலாப்
புலையினுக் கஞ்சு பொய்சேர் புறஞ்சொலற்கஞ்சு தீய
கலையினுக் கஞ்சு வேண்டாக் களவினுக் கஞ்சு கேட்போர்க்
கிலையெனற் கஞ்சு தீங்கை எழுதுதற்கஞ்சு வாயே

30 இறைநிலை பழிப்பார்க் கஞ்சிங் கிரப்பதற் கஞ்சு முன்னோர்
முறைமர பழிப்பார்க் கஞ்சு மூர்க்கரை அஞ்சேல்-வாழ்வின்
கறைபடு செயல்கட்கஞ்சு கடமைகட் கஞ்சேல்-தன்கண்
மறைபிறர்க் குரைக்க அஞ்சு மறமெலாம் அஞ்சுவாயே.

**நன்றி :—**

31 பீடுமலி பேரவையில் எனையழைத்துப்
பெருஞ்சுவையாம் அச்சமெனும் பொருளைப்பற்றிப்
பாடுகென அன்புளந்தால் ஆணை தந்து
பாராட்டிச் செவிமடுத்த பெருமக்கட்கும்
நீடுபுகழ்ச் செந்தமிழின் நிறைவை எண்ணி
நெஞ்சகத்தே மகிழ்ந்தருளும் சான்றோர்கட்கும்
நாடுபுகழ் கவிஞர்பிற நல்லோர்கட்குரும்
நன்றியொடென் அன்புமிகு வணக்கம் வாழி!

# தொல்காப்பியத்தில் அக்கும் இக்கும்

**வித்துவான் மோ. இசரயேல், எம். ஏ.**
*தமிழ் ஆய்வுத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.*

தொல்காப்பியனார் கூறும் ஒன்பது சாரியைகளில் (எழு. 119) அக்கு, இக்கு என இரண்டு சாரியைகள் உள. இவை இரண்டும் அவர் காலத்தில் முழு உருவில் வழங்கவில்லை இன்று நமக்குக் கிடைக்கப்பெறும் எந்த நூலிலும் இவற்றை முழு உருவில் காணல் இயலாது. அவரே சொற்களின் இடையில் இவை வருங்கால் அவை அடையும் மாற்றங்களைக் கூறி முழு உருவில் வழங்கா எனத் தெளிவாக்கி உள்ளார். அவர் கூற்றுப்படி முன்னதன் முற்பகுதியும் பின்னதன் பிற்பகுதியும் தான் மொழியில் வழங்குகின்றன. அக்கு (> —அ—) (எழு. 128);—இக்கு—(> —(க்)கு—) எழு 126, 127.)

மொழியின் எவ்விடத்திலும் தன்னுருவில் அமையாத இவற்றை ஏன் இவ்வுருக். கொடுத்துக் கூறினார் தொல்காப்பியனார்? நன்னூலார் (நன். 244) இவற்றைச் சாரியைகளாகக் கொண்டிலரே! அவர் அக்குச்சாரியை வழங்கும் எனத் தொல்காப்பியனார் கூறிய இடங்களில்—அ—சாரியையே (நன். 223, 225) வழங்குவதாகக் குறிப்பிடுகின்றார். இக்கு என ஒரு சாரியைக் கூறிற்றிலர்; அது வழங்கும் இடங்களாகத் தொல்காப்பியனார் குறிப்பிட்ட வழக்குகளைப் பற்றியும் ஒன்றும் கூறிற்றிலர்.

இச்சாரியைகள் தொல்காப்பியனார் காலத்தில் பேச்சு வழக்கில் அல்லது நூல் வழக்கில் வழங்கிப் பின்னர் உருமாறி இருக்கக் கூடும் எனச் சிலர் கருதலாம். வருமொழி முதலில் வல்லொற்று வருங்கால் அக்கின் அகரம் ஒழிந்தன கெடும் (எழு. 128) என்றும், இக்கின் இகரம் இகர ஐகார வீற்றின் முன்னர்க்கெடும் (எழு 127, 128) என்றும் தொல்காப்பியனார் கூறுவதினின்று ஒருகால் பிறஇடங்களில் அவை முழு உருவில் வழங்கியிருக்கலாமோ என்ற ஐயப்பாடு தோன்றுவதும் உண்டு. அதற்கான சான்றுகள் எந்நூலிலும் காணக் கிடைத்தில. எனவே அவற்றின் முழு உருவம் எக்காலத்திலும் வழக்கில் அமையவில்லை எனக் கருதலே பொருத்தம் உடைத்து.

தொல்காப்பியனார் சொற்களிடையே பயின்று புணர்ச்சிக்குப் பயன்படும் வெற்றுருபன்களை (Empty morphs-sandhi particees) இருவகையாகப் படுத்து (எழு. 112, 132) ஒன்றனுக்குச் சாரியை எனவும், மற்றதற்கு எழுத்து எனவும் பெயரிட்டுள்ளார். எனவே அக்கு எனக் குறிப்பிடாமல்—அ—

எனக் குறிப்பிட்டால் அது சாரியை ஆகாது எழுத்தின்பாற் படும் எனக்கருதி இவ்வுருவம் அளித்தாரோ என்ற ஐய்யப் பாடு தோன்றுவதும் உண்டு. அல்லது பிறழ் பிரிப்பினால் (Metanalysis) பின்னர் வரும் வல்லினமெய்மைச் சேர்த்துக் சேர்த்துக் கொண்டார் எனக் கருதுவாரும் உளர். ஆனால் தொல்காப்பியனாரே வருமொழி முதலில் வல்லினம் வருங்கால் அகரம் மட்டும் நிற்கும் (எழு. 128) என்பதைத் தெளிவுபடுத்தி யுள்ளார். எனவே பிறழ்பிரிப்பு என்று கருதவும் இடமில்லை.

இக்குச் சாரியை மொழியில் அமைவது —கு—வடிவிலே யேயாகும். இதனையும் தனி எழுத்தாகக் கூறுது சாரியையின் இலக்கணத்தை யொட்டி அமைய இவ்வாறு அமைத்தனர் போலும். இது பிறழ் பிரிப்பினால்தான் தோன்றி இருக் கலாம் என்பதை மொழியியல் அறிஞர் இராமசாமி ஐயர்[1]. தெளிவுபடுத்தி உள்ளார். அதனைத் தெளிவாகக் கீழே விளக்குதும்.

1 ·அக்குச்சாரியை

வழங்கும் இடங்கள் :— தொல்காப்பியனார் பின்வரும் இடங்களில் அக்குச் சாரியை வழங்கும் என்கிறார்.

1. ஈம் + அக்கு + குடம் > ஈமக்குடம் (எழு. 270)
2. கம் + அக்கு + குடம் > கம்மக்குடம் (எழு. 270)
3. தாழ் + அக்கு + கோல் > தாழக்கோல் (எழு. 384)
4. தமிழ் + அக்கு + பிள்ளை > தமிழப்பிள்ளை (எழு. 385)
5. ஊன் + அக்கு + குறை > ஊனக்குறை (எழு. 418)
6. மன்று + அக்கு + பண்ணை > மன்றப்பண்ணை (எழு. 418)

2. வடிவம் (Form)

தொல்காப்பியனார்,

எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது (எழு. 128)

என்னும் நூற்பாவில் அக்கின் அகரம் எஞ்சியன கெடும் என்று கூறுகிறார், முதல் நான்கு எடுத்துக்காட்டுகளில், அகரச்சாரியை தான் வரும் (நன் 223, 225) என நன்னூலார் குறிப்பிடுகிறார். எனவே இவ்விடங்களில் வழங்கும் வேற்றுருபு (Empty morph) அகரமேயாம் என்பது தெளிவு.

3. உருபா ? (Case madrker) வெற்றுருபா ? (Empty morph)

இங்கு வழங்கும் அகரச் சாரியைப் பெரும்பாலும் கிழமைப் பொருளுடையது போலத் தோன்றுகின்றது.

ஆனால் இன்றைய பேச்சுத்தமிழில் தாராழ்க்கோல், தமிழ்ப் பிள்ளை என்னும் வழக்குகள், அகரத்தை ஏற்காது இருப்பினும் பொருளில் மாற்றம் அடையவில்லை. எனவே அகரம் இந்த இடங்களில் வெற்றுருபேயாகும். ஆனால் குன்றக்கூகை, ஈமக்குடம் என்பவற்றில் அகரம் கிழமைப் பொருள் (Genitive signification) உடையது என்று கருதுவதும் தவறாகாது' தொல்காப்பியனார் கூறியுள்ள சாரியைகள் 'வேற்றுமைப் பொருள் உடையனவாகவும் யாதொரு பொருளும் அற்றன வாகவும் வழங்குகின்றன என்பது இவண் கவனித்தற்குரித்து.

## II. இக்குச்சாரியை

### 1. வழங்கும் இடங்கள்

*1.* இகர வீற்றுத் திங்கட் பெயருக்கும் வினைச் சொற்கும் இடையிலும் (எழு. *248*)

(எ--டு ஆடி + இக்கு + கொண்டான் > ஆடிக் குக்கொண்டான்.

*2.* ஐகார வீற்றுத் திங்கட் பெயர்க்கும் வினைச் சொற்கும் இடையிலும் (எழு. *286*) வழங்கும் எனத் தொல்காப்பியனார் குறிப்பிடுகிறார்.

(எ--டு) சித்திரை + இக்கு + கொண்டான் > சித்திரைக் குக்கொண்டான்.

*1.* வடிவம்:— இக்கின் சாரியையின் இகரம் இகர ஐகார வீற்றின் முன் கெடும் (எழு, *126*, *127*) என்றும் அவர் முன் னரே குறிப்பிட்டுள்ளார். எனவே எஞ்சி நிற்பதுகுவேயாம். இதுவும் இகர ஐகார உயிர்களின்பின் வருதலின்-கு-என நின்றாலே வல்லினம் இரட்டுதலால்—க—தோன்றிவிடும். எனவே, ஆடி + கு > ஆடிக்கு என்றாகி விடுகிறது. சித்திரை + கு > சித்திரைக்கு என்றாகிவிடும்.

நிலைமொழி ஈற்றில் உள்ள இகரம் வரும் 'கு'கரத்துடன் இணைக்கப்பட்டுத் தவறாகப் பிரிக்கப்பட்டிருக்கலாம் என ஈண்டு கருதுவது தகுதி உடையதேயாகும். ஐகார வீற்றிலும் இகரம் உள்ளது. அ + இ = ஐ என உயிர்கள் இணைவினால் (Vowel cluster) ஐகாரம் தோன்றும் உண்மையைத் தொல் காப்பியனாரே குறிப்பிட்டுள்ளார். (எழு. *54*) எனவே பண்டைக் காலத்தில் ஆட் + இக்கு > ஆடிக்கு என்று தவ றாகப் பிரிக்கப்பட்டுப் பின்னர் ஆடி + இக்கு என இரு உருப்புகளாகக் கொள்ளப்பட்டிருக்கலாம்.

3. வேற்றுமை உருபா? வெற்றுருபா?

—'கு',—வடிவில், நான்காம் வேற்றுமை உருபை ஒத்துள்ளது. தொல்காப்பியனாரே நான்காம் வேற்றுமை உருபு கு' காலப் பொருளில் ஏழாம் வேற்றுமை உருபுக்குப் பதிலாக வழங்கும் என்கிறார்.

காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
அன்னபிறவும் நான்க னுருபில்
தொன்னெறி மரபின தோன்றலாறே (சொல். 110)

என்னும் நூற்பாவில் "நாளைக்கு வரும்" போன்ற எடுத்துக் காட்டில் காலப் பொருளில் நான்காம் வேற்றுமை உருபு வழங்குவதை அவர் ஒப்புக் கொள்ளுகிறார். ஆடி, சித்திரை என்னும் திங்கட்பெயர்கள் காலப் பெயர்களே. எனவே அவற்றில் வழங்கும் 'கு' காலப்பொருளில் வழங்கும் நான் காம் வேற்றுமை உருபு என்பதை எவரும் மறுத்தல் இயலாது.

நாளைக்கு வருவான், இன்றைக்கு வந்தான், இரண்டு மணிக்கு வருவார் என்னும் சொற்றொடர்களில் எல்லாம் 'கு' உருபு காலப் பொருளில் வழங்குகின்றது. இத்தகைய தற் கால வழக்குகளுக்கெல்லாம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இலக்கணம் கூறிப் போந்த தொல் காப்பியனார் இவற்றை யொத்த ஆடிக்குச், சித்திரைக்கு என்னும் வழக்குகளில் இக்கு என்னும் வடிவத்தையும் படைத்து, இடைக்கொண்டு நுழைத்து இடர்ப்படுவது வியப்பாகவே உள்ளது.

முடிவுரை இதுகாறும் அக்கு, இக்கு என்பன முழு வடிவில் வழங்கவில்லை என்பதும், தொல்காப்பியனார் தாம் கருதும் சாரியை—இலக்கணத்திற்கு ஏற்ப அவற்றை இவ்வடி வங்கள் கொடுத்து அமைத்திருக்கலாம் எனவும், இவ்வடி வங்கள் அவருக்குப் பிறழ் பிரிப்பின் (Metanalysis) காரண மாகக் கிடைக்கப்பெற்றிருக்கலாம் எனவும், பிற்கால இலக் கண ஆசிரியர்கள் இத்தகைய வடிவங்களைப் போற்றிக் காக்கவில்லை எனவும் தெளிவு படுத்தப்பட்டது. அக்கும், இக்கும் 'அ'கரமும் 'கு'கரமுமேயாம் 'அ'கரம் பெரும்பாலும் வெற்றுருபாயும் (Empty morph) 'கு'கரம் ஏழாம் வேற்றுமைப் பொருளில் மயங்கி வரும் நான்காம் வேற்றுமை உருபாயும் செயல்புரிகின்றன.

# தொதுவர் மொழி

**வித்துவான். சி. கோவிந்தராசனார்,**
பழம்பொருள் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்

நீலமலையில் தொதுவர் வாழும் உச்சிமட்டப் பகுதியினொன்று 'பாய்கரைமந்த்' என்றழைக்கப் படுகின்கிறது. தொதுவரின் மிக்கசெல்வம் எருமை மந்தைகளேயாம். மந்தைகள் தொகுதியாக நிறைந்துள்ள ஊரை இம்மக்கள் மந்த்(மந்து) என்றே குறிப்பிடுகின்றனர். இக்குறிப்பை ஆராயின் மக்கள் கூட்டத்தையும் இவர்கள் மந்தை(மந்த்) என்ற சொல்லால் சுட்டுவதாகவும் தெரிகின்றது. எனவே, இயற்கையின் சூழலாகிய காடடர்ந்து இடையிடையே அருவிகள் பாய்ந்தோடும் மலைப்பகுதியை, பாய்கரை என்று குறிப்பிட்டதுடன், மந்த் என்பதையும் சேர்த்து 'பாய்கரை மந்த்' என்றழைக்கின்றனர். இத்தகுதியிலேயே 'கரியாமந்த்' ஒத்தக மந்த் (ஒற்றைக்கல் மந்தை) ஆகிய ஊர்களின் பெயர்களும் சுட்டப்பெறுகின்றன. காடும் கானலும் சூழ்ந்த கரியாமந்த் என்னும் பகுதியில் வாழும் தொதுவரின் பேச்சிலுள்ள சொற்களுக்கும், பாய்கரை மந்திலுள்ள தொதுவரின் பேச்சிலுள்ள சொற்களுக்கும் பொருள் ஒன்றாயினும் ஒலிக் குறிப்பில் வேறுபாடுகள் உள்ளன. அவற்றுள் சில சொற்களைக் காண்பாம்.

### பாய்கரைமந்த்

| | |
|---|---|
| நீ—நீ | ஐயா—ஐய்யி |
| நீங்கள்—நம் | அம்மா—அவ்வூ |
| நான்—ஆன் | அண்ணன்—ஏணோன் |
| நாங்கள்—எம் | தம்பி—என்னொடுவேத் |
| அவன்—ஆத் | மனைவி—என்தஸ்மஹ் |
| அவர்கள்—அத்வுடிம் | பெண்குழந்தை—கூஹ் |
| அவள்—அது | கை—ஹை(கொய்) |
| என்றால்—என்மில்லன் | கால்—ஹகாலு |
| உங்களால்—நெம்போர்டு | தசை—யோத் |
| எங்களால்—எம்போர்டு | முழங்கால்—மொக்மு |
| உங்கலோடு—நின்பொடி | பாதம்—உள்க்ஹால் |
| வருகிறேன்—வஸ்கின் | நகம்—யூர் |
| போகிறேன்—விபினி | தலை—மட் |
| எங்கே—எட்வித் | தலைமயிர்—மட்மீர் |
| இங்கேவா—இட்வா | நெற்றி—நெத்தி |
| போகிறாய்—பிபினி | காது—கிவ்வி |
| கடவுள்—சாம்மி | கண்—க்கண் |

முக்கு—மெத்துவ்
வாய்—மோய்
கழுத்து—எமிர்
தொண்டை—மெக்வெல்
நாக்கு—நாவ்
உதடு—உதர்
பல்...பர்(ஸ்)
தோள்—தெப்
தோள்பட்டை—தெப்கோர்டு
முழங்கை—முஹ்கொய்
விரல்—வெள்
உள்ளங்கை—உள்கொய்
புறங்கை—மர்முன்கொய்
மார்பு—நெஞ்கு(ஷ்)
மனம்—மன்...சு
இருதயம்—நள்சிவன்
எலும்பு—எல்வ்
தோல்—தூர்ஸ்
நீர்—நீர்—உ
சுடுநீர்—ஆநீர்
குளிர்ந்தநீர்—தொந்நீர், கொர்நீர்
பார்—தூட்(See)
பூச்சி—குதல்கார்
புளி—பீழ்ளி
நாளை—மக்கான்

மிளகாய்—பொகி
குடை—கொடர்
பிடி—வட்த்(Handle)
எருமை—எருப்
மாடு—தொறும்
நாய்—நோய்
வறகு—பதல்
வெண்ணெய்—வெண்ண்
மோர்—மொச்சு
மரம்—மேறு
ஒருநாள்—உன்னேள்
அடுப்பு—ஓங்கல்
மண்பானை—பரிவ்
செப்புப்பாத்திரம்—கெப்பு
சோறு—த்துவர்
குழம்பு—ஹார்ம்
இடையாடை—தடுப்
துப்பட்டி—புதுக்குளி
தூங்கு—ஓர்ஹ்
காற்று—ஹாத்உ
வீடு—ஹாஸ்
மந்தைகள் / நிறைந்த ஊர் —மந்த்
மழை—மஹ்
பெய்கிறது—அட்ஸ்

**கரியாமந்த்**

அங்குபோ—அட்வீ பீளி
இங்குபோ—இட்வீ பீளி
எங்கி—எட்வீ
நான்—ஆன்
நாம்—எம்
நீ—நீ
நீங்கள்—நிம்
அது—அது
தந்தை—எய்யா
தாய்—அவ்வுவை
அண்ணன்—என்னென்

அக்காள்—என்னெக்
தங்கை—என்னுடர்வெத்
தம்பி—என்னுடர்வெத்
மாமன்—என்முன்
மாமி—மிம்மீமி
மனைவி—எம்தொஸ்மொக்
ஆண்குழந்தை—எம்கர்மொக்
பெண்குழந்தை—எம்குக்
மருமகள்—மன்மொக்
மருமகன்—மொள்மொக்
சும்மாயிரு—புக்கினிரு

**நிறப்பெயர்**

பச்சை—பச்செ
நிறம்—நெறம்
சிகப்பு—போக்குடி
வெள்ளை—பெள்த்ச்

மஞ்சள்—போக்குடி
கருப்பு—கர்த்ச்
நீலம்—நீலகுடி.

# ஆதிமந்தி

ச. பாலசுந்தரம்

ஆட்டனத்தி :—

நெடுமுடியைப் பெறுமுரிமை எனதானுலும்
நிறையறிவு தகுதியெனக் கில்லை—தம்பி! (297)
தந்தைக்குப் பின்அரசு தடுமாருமல்
தாங்கியதைக் காத்தபெரும் வீரா!

இளஞ்சேரல் :—

…… …… …… அண்ணு
எந்தவகை யிலுமெனக்குத் தாங்கள் மேலோர்
இசைந்தேற்க வேண்டுகிறேன்

ஆட்டனத்தி :—

…… …… …… தம்பி உன்றன்
சிந்தைவளர் தூயஅன்பை நோக்க நானேர்
நெஞ்சுடர்முன் சிறுவிளக்காய் ஆனேன் உன்னைச்
சொந்த உடன்பிறப்பாகப் பெற்ற தொன்றே
தூயதவப் பேரின்பம், நீயே ஆள்க! (298)

சோன்அமைச்சர் :—

வணங்குகிறேன் அரசேநும் மனத்தின் மாண்பை
வாயுரையால் கூறவியலா தெம்நாட்டார்
பிணங்கும்வகை யின்றியுங்கள் திருக்கரத்தால்
பின்பிறந்தோற் காட்சி நல்கி முடியும் சூட்ட
இணங்குவிரேல் அதுவெமக்குப் பெரும் பேருகும்.

ஆட்டனத்தி :—

இப்பொழுதே இவ்விடத்தே எல்லோர் முன்பும்
குணஞ்சான்ற தம்பி இளஞ்சேரலுக்குக்
கோலேந்தி ஆளமுடி சூட்டுகின்றேன் (298)

[இளஞ்சேரல் கையில் வைத்திருந்த முடியை வாங்கி இளஞ்சேரல் தலையில் வைத்து முடிசூட்டித் தன் மாலையை எடுத்து அணிவித்து வாழ்த்துகிருன் ஆட்டனத்தி அவையோர் யாவரும் வாழ்த்துகின்றனர்]

கரிகாலன் :—

அருளுளங்கொண் டறிவோடிங் காடல் கற்பித்
தன்பாக வளர்த்த பெருங்கூத்தர்—பெண்ணைப்

பொருளாக மதியாமல் தெய்வம் போலப்
பொற்புபெறக் கற்புடனே வளர்த்துச், சிந்தை
இருளாமல் கல்விபெறச் செய்திந் நாட்டின்
இளவரசி தனைவளர்த்த முல்லை யம்மை
இருவோரும் இவர்களுக்குத் துணையாய் நின்று
என்றுமவர் மக்களெனக் காத்தல் வேண்டும் (300)

**இரும்பிடத்தர்தலையார் :—**

சென்றவற்றை மறந்தினிநம் சேரவேந்தர்
செம்பியரோ டுறவாகி வாழ்தல் வேண்டும்

**இளஞ்சேரல் :—**

வென்றிமிகு வேந்தளருப் படியே; யாங்கள்
வேறுபடுநிலைமுன்பே வீழ்ந்த தென்றும்
நன்றுபுரி வளவரது நட்பும் இந்த
நல்லுறவும் ஆகூழால் பெற்றோம் அன்றே ?

[வணங்கியமருகிருன் கூத்தனும் முல்லையும் மகிழ்ந்து]

**கூந்தன் :—**

நன்றியினல் நாத்தளர்ந்தோம் கண்ணில் இன்ப
நதிபெருகி மெய்சிலிர்த்தோம் வேந்தே வாழ்க! (301)

**ஆட்டனத்தி —**

அவையோரே! ஆன்ருேரே! அரசே! எங்கள்
அருமைமிகு புலவர்பெருமானே! என்றன்
நவைநீக்கி நாடாளத் தந்தீர்; உங்கள்
நட்புறவால் செங்கோலை ஏந்து கின்றேன்
புவியாளும் பேற்றுடனிப் பொன்னை யீந்த
புவிமன்னர் கவிமன்னர்க் கென்வணக்கம்
சுவையேறும் இசைக்கலைஞன் என்றன் தம்பி
தூயமுகி லோன் என்றும் துணையாய் நின்று (392)

படியாளும் பொறுப்பிதிலுங் பங்குகொண்டென்
பக்கமிருந்திட வேண்டும் ... ... ... ...

**இசைமுகிலோன் :—** [தழுவிக்கொண்டு]

...... ...... அண்ணு! உங்கள்
அடிவாழும் பேற்றைஎனக் கன்றும் இன்றும்
அருளியதென் தவமாகும் ...... ......

**இரும்பிடர்த்தலையார் :—**

…… …… …… ஆட்டனத்தி
முடிவாழ்க! முன்னோரின் புகழென் றென்றும்
மூவுலகும் விளங்கஇனி தூழி வாழ்க!
கொடிவாழ்க! கோல்வாழ்க! ஆட்டனத்தி
குலமெலாம் இளவரசி யோடு வாழ்க!

[எல்லோரும் வாழ்த்துகின்றனர்ஆதிமந்தி எழுந்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டு]

**ஆதிமந்தி :**

நெடுவாழ்வில் எமைநிலைக்கச் செய்து மக்கள்
நெஞ்சத்தில் வாழுகின்ற நேயஞ் சான்ற (303)
பெருமகள்;இப் பேதைக்கு வாழ்வு தந்த
பெண்ணரசி தொண்டுருவாய்ந் பிறந்த சீர்த்தித்
திருமகள்; வான் தியாகத்தின் வடிவமான
தெய்வமகள் மருதியையான் வணங்குகின்றேன்.
அருமைமிகு தோழமைக்கிங் காவிதந்த
அருளுருவின் புகழ்பாடித் தமிழகத்தின்
பெருமைமிகச் செய்தல் அறக் கடமையாகும்
பீடார்மாண் புகழ்பெற்ற மருதி! வாழ்க!

[மருதியை எல்லோரும் வணங்கி வாழ்த்துகின்றனர்]

## வாழ்த்து

வாழிசெங்கதி ரோன் சென்னி! வளர்புகழ் ஆதிமந்தி
வாழி!விற் கொடியோன் வாழி வளர்த்தமிழ்ச் சங்கம்வாழி!
வாழிநற் கலைகள் வாழி புலவர்கல் லூரி வாழி!
வாழியெங் கழகம் வாழி வளர்தமிழ் வாழிவாழி.

முற்றும்

# குறளும் சிலம்பும்

புலவர், திரு. வி. சச்சிதானந்தம்.

உலகில் தோன்றிய மொழிகள் பல. அவற்றுள் உயர் தனிச் செம்மொழியாவுகம், உலக மொழிகளுக் கெல்லாம் தாய்மொழியாகவும் விளங்குவது என்றுமுளதென்றமிழே யாகும். வரலாற்றுக் கெட்டாத காலத்திருந்தே தமிழில் இலக்கியங்கள் பல தோன்றின. அவற்றுள் காலத்தோடு ஒன்றிய இலக்கியங்களும் உண்டு; காலத்தை வென்று வாழும் இலக்கியங்களும் உண்டு. தமிழர்கள் தங்களது உணர்வையும், பண்பாட்டையும் உணர்த்துகின்ற தமிழ்த் திருநாளிலே ஆன்ற பெருமையுடைய குறளையும், சிலம்பையும் எண்ணிப்பார்ப்பின் தமிழரின் உள்ளமெல்லாம் உணர்வு பெறும்; உயர்ந்து விளங்கும்; தமிழ்வாழும்; தமிழரும் வாழ்வர்.

குறளும் சிலம்பும் தமிழரின் பெருமையைப் பறை சாற்றுவன; தமிழரின் தனிப்பெரும் சொத்தாக விளங்குவன. குறள் வாழ்வின் இலக்கணம் கூறுவது; சிலம்பு வாழ்ந்ததன் தன்மையை உணர்த்துவது குறள்: தமிழரின் தனிச் சிறப்பை அறிவிப்பது சிலம்பு. குறள் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலினைக் கொண்டது; சிலம்பு இயல். இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கொண்டது. தமிழர்களின் பெருமையை உலக அரங்கிலே வைத்துப் போற்றுமாறு செய்தது குறள்; தமிழரின் உண்மை வாழ்வினை உணரச் செய்வது சிலம்பு. இல்லற வாழ்க்கை மேற்கொண்ட வள்ளுவர் எழுதிய குறள்; துறவு நிலை பெற்ற இளங்கோ எழுதியது சிலம்பு. அறிவு கொளுத்துவது குறள்; உணர்வைப் பெருக்குவது சிலம்பு. வாழ்வின் முறை கூறுவது குறள்; வாழ்ந்த நிலை கூறுவது சிலம்பு. காலத்தை வென்று வாழ்வது குறள்; காலத்தோடு ஒன்றி வாழ்வது சிலப்பு. காலத்தால் வேறுபட்ட குறளும், சிலம்பும் கருத்துக்களை உணர்த்துவதில் ஒன்றுபட்டு விளங்குகின்றன என்பதை ஆய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமயப் பொதுநோக்கம்: நல்லுணர்வையும். நன்னெறியையும் நாட்டிலே பரப்புவதற்காக ஏற்பட்ட சமயங்கள் நாளாவட்டத்தில் பிளவுகளுக்கும், பூசலுக்கும் காரணமாக ஆயின. நெறியைப் பின்பற்றாது முறையை (சடங்குகள்) மட்டும் கைக்கொண்டதால் நல்லவர் உள்ளங்கள் சமயத்தையே வெறுக்க ஆரம்பித்தன. சமயப்பொதுமையையும் சான்றோர்கள் சிலர் உணர்த்திச் சமுதாயத்தை வாழவைத்தனர். திருக்குறள் கடவுளின் பெயர் கூறாமல் பொதுவாகக் கடவுள் வாழ்த்

தையும், இயற்கை வாழ்த்தாக வான் சிறப்பையும், வாழ் வாங்கு வாழ்ந்த பெரியோரின் வாழ்த்தாக நீத்தார் பெருமை யையும், ஒழுங்கும், நெறியும் கொண்டு இலங்கத் துணைபுரியும் அறத்தின் வாழ்த்தாக அறன்வலியுறுத்தலையும் கூறியுள்ளது. பற்பல சமயத்தவரும் தத்தமது கொள்கைக்கேற்றவாறு குறளமைந்திருப்பதைக் குறித்து உரிமைகொண்டாடுவதால் குறளின் சமயப் பொதுநோக்கையும் அறிய முடிகிறது.

குறளைப் பின்பற்றிச் சிலம்பும், பொது நோக்கோடு ஞாயிறு, திங்கள், மழை, நாடு ஆகிய இயற்கை நிலையினை வாழ்த்தியது. மேலும் இளங்கோவடிகள் தாம் இன்ன சம யத்தவர் என்று கூருது, தனது முன்னேனாகிய செங்குட்டு வனை "ஆனேறு உயர்த்தோன் அருளினில் விளங்க - மாநிலம் விளக்கிய மன்னவன்" என்று கூறியும், பிறவாயாக்கைப் பெரியோன் கோயில்" முதலாகப் பலகோட்டங்கள் இருந் தன என்று சொல்லியும் சென்ற தன்மையினின்று சிலம் பின் சமயப் பொது நோக்கத்தைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

புரட்சி: 'புரட்சி' என்ற சொல் புதுமையான சொல்; ஆனல் உள்ளக் கிளர்ச்சியை எழுப்பக் கூடிய சொல். பழந் தமிழிலக்கியங்களில் 'புரட்சி' என்ற சொல் இல்லை; ஆனல் 'எழுச்சி' என்ற சொல் உண்டு, பாட்டுக் கொரு புலவன் பாரதி புரட்சி என்ற சொல்லைக் கூறிப்புது மெருகு கொடுத்து நாட்டு மக்களின் உணர்ச்சியைத் தூண்டினன். அன்னிய நாடுகளில் கருவிப் புரட்சியால் ஏற்பட்ட விளைவுகளை வர லாறு உணர்த்துகிறது. கருத்துப் புரட்சி ஏற்பட்டதைக் குறளும் சிலம்பும் அறிவிக்கின்றது.

தொன்மைச் சிறப்புடைய தொல்காப்பியர் காலம் முதல் 'பரத்தையர்கள்' என்று ஒரு சிலரைப் பிரித்து வைத் துச் சமுதாயத்திலே அவர்களுக்குத் தனியிடம் கொடுத்திருந் தார்கள். ஆனல் ஒழுக்கத்திலும், உயர்ந்த பண்பாட்டிலும் சிறந்த வள்ளுவர் பரத்தையர்களை வரைவின் மகளிர் என ஒதுக்கித் தள்ளினர். இன்பம் நுகர்தற்கேற்றவராய பரத்தை யரை இன்பத்துப்பாலிலேயே கூருமல், பொருளை நாடும் புன்மை மகளிர் எனக்கருதிப் பொருட்பாலிலேயே இணைத் துக் கூறினர். நடைமுறையிலிருந்த நிலையைச் சிறிது மாற் றிக் கருத்துப் புரட்சியை உண்டாக்கியது குறள்.

விளங்கும் புகழ் இளங்கோவடிகள் பரத்தையர் குலத் திலே பிறந்த மாதவியைத் தன் குலத்திற்கேற்றவாறு வாழ்ந் தாள் எனக் கூருது. விடுதலறியா விருப்போடு, கூடலும், ஊடலும் கோவலற்களித்தும், கோவலன் ஊழ்வினை காரண

மாகப் பிரிந்து சென்ற பின்னர் தனது வாழ்க்கையையே வெறுத்துத் துறவு பூண்டும், தனது இளநலம் பெற்ற மகள் மணிமேகலையையும் துறவு பூணச் செய்து சமூகத் தொண்டாற்றும் அறமகளாக ஆக்கியும் வாழ்ந்தாள் என்று கூறுகிறார். இளங்கோ, பரத்தையரை ஒதுக்காமலும் - கழிவு படுத்தாமலும் சமுதாயத்திலே அவர்களை வாழவைத்து, சிறந்த புகழையும் உண்டாக்கினார். காலத்தையும், சூழ்நிலையையும் எண்ணிப் பார்க்கும்போது குறளும், சிலம்பும் செய்த கருத்துப் புரட்சி, சமுதாயத்திலே செய்த பெரும் புரட்சியாகும் என்பதை அறிய முடிகின்றது.

பெண்களே சமுதாயத்தின் கண்களாவர். எந்த நாட்டில், பெண்ணுரிமை பேணப்படுகிறதோ, எந்தச் சமுதாயத்தில் அறிவும், அன்பும் கொண்டவர்களாகப் பெண்கள் விலங்குகின்றார்களோ அந்த நாடும், சமுதாயமுமே சிறந்து வாழும். பெண்ணின் பெருந்தக்க யாவுள? என்று வியந்து கேட்கின்றார் வள்ளுவனார். கற்பெனும் திண்மையால் தன்னைக் காத்து, உண்டி முதலியன கொடுப்பதால் தன் கணவனைப் பாதுகாத்து, பழிபோக்கும் காரணத்தால் தகைசான்ற சொல்லினைக் காப்பாற்றி, கடமையாற்றுவதில் சோர்வு அடையாதிருப்பவளே பெண்ணுவாள் என்று பெண்ணின் இலக்கணம் கூறுகிறது குறள்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் - என்பது குறளாகும்.

குறளின் இலக்கணத்திற்கேற்ப, சிலப்பதிகாரம் பெண்ணரசியாய கண்ணகியைப் படைத்துக் காட்டியது. விடுதலறியா விருப்போடு, மாதவி வீட்டிலே தன் கணவனாகிய கோவலன் வாழ்ந்த காலை மனமும் வேறுபடாது. மணாளனையும் பழித்துரைக்காது ஆற்றியிருந்தாள் கண்ணகி என்பதினின்று தற்காத்துக் கொண்ட பண்பினை அறிகிறோம். மாடமதுரையிலேயிள்ள மாதரியின் வீட்டிலே தூங்கியிருந்த கண்ணகி செந்நெலரிசிச் சோறாக்கி, பலா, வெள்ளரி, மாதுளங்காய்களால் கறிசமைத்து, மா, வாழைக்கனிகளைக் கொடுத்து, பால், நெய் முதலியன பெய்து, கவின் பெறப் புனைந்த தவிசின்கண் கணவனை இருக்கச் செய்து, வாழைக்குருத்தை விரித்து அறுசுவையுண்டியை இட்டாள் என்று சிலப்பு சொல்வதினின்று தற்கொண்டானைப் பேணுகின்ற தன்மையினை அறிகின்றோம். தனது கணவனைக் கள்வனென்று குற்றம் சாட்டிக் கொன்றனர் என்ற செய்தி கேட்டுப் பொங்கி எழுந்தாள்; விழுந்தாள். மன்பதை அலர்தூற்ற, மன்னவன் தவறிழைப்ப அன்பனை இழந்தேன் என்று அகம் கொதித்தாள். அறக் கற்பு மறக் கற்

பாக மாறியது. மதிக்கண் மறுப்போல கள்வன் என்ற பழிச் சொல் காட்சியளித்தது. பழிபோக்கி வாழ நினைத்தாள். உயிரனையான் சென்ற பின்பும் உடன் கட்டையேறாது உயிர் வாழ்ந்தாள். சோழ நாட்டைப் பிரிந்து வந்து தனிமையாளே மே என்று சிறிதும் சோர்வு கொள்ளாமல் பிறர் நெஞ்சுபுகாத பத்தினிப் பெண்ணாய கண்ணகி பலர் வருந்தச் சென்று பாண்டியனைக் கண்டாள்; முறைசெய்து காப்பாற்றும் மன்ன வன் நெறி தவறிவிட்டான் என்பதைக் கூறித் தன் கணவன் கள்வனல்லன் என்பதை மெய்ப்பித்தாள். பொன் செய் கொல்லன் தன்சொற்கேட்ட யானே கள்வன் எனக்கூறித் தன்னுடைய பழிச் செயல் பிற மன்னரது செவியிலே படுவ தற்கு முன் மாய்ந்தான் என்று கூறுகிறது சிலம்பு. இதனின் றும் கண்ணகியின் வீரத்தையும், தகை சான்ற சொல்லினை— புகழினைப் பாதுகாப்பதிலே கொண்டிருந்த எண்ணம், எண் ணத்தைச் செயலாற்றுவதிலே மேற்கொண்ட சோர்வின்மை ஆகியவற்றையும் அறியும் பொழுது தமிழ்ப்பெண்களின் தன்மை, என்னே! என்று வியக்க நேரிடுகின்றது.

மானமும் வீரமும் மனிதனுக்குத் தேவை என்கிறது குறள்; மானத்தையும் வீரத்தையும் வாழ்ந்த மனிதனோடு இணைத்துக் காட்டுகிறது சிலம்பு. காவா நாவிற் கனகனும் விசயனும தென்றமிழ் நாட்டு வேந்தர்களைப் பழித்துரைத்த னர் என்ற செய்தி சேரன் செங்குட்டுவன் செவியிலே விழுந் தது. "தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத் தாலும் விடேன்" என்று கூறி வடநாடு சென்று வெற்றி கொண்டு, கனக விசயருடைய தலைமீது பத்தினிப் படிமத் திற்குரிய கல்லைச் சுமக்கவைத்து அவர்களது செருக்கினை அடக்கினான் என்பதை அறியும்போது பண்டைத் தமிழரின் பெருமைமிக்க வாழ்வினை உணர்ந்து மகிழ முடிகிள்றது,

செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருத்தல் செந் தமிழ் நாட்டாரின் சிறந்த பண்பு என்று கூறுகிறது குறள்; "விருந்து புறந்தரூஉம்" பெருந்தண் வாழ்க்கையும்" விருந் தெதிர் கோடலும் இழந்த என்னை" என்பன போன்ற அடிக ளால் விருந்தோம்பிய தன்மையை விளக்கிக் காட்டுகிறது சிலம்பு. குறளின் கருத்துக்கள் முழுவதையும் சிலப்பதிகாரத் திலே செறித்து வைக்கப்பட்டிருந்தாலும் ஒரு சில கருத்துக் களையே ஒப்புமை காட்டிக் கூறினேன். இனி, குறளின் அடி களையும், குறட்பாவின் நினைவினையும் தெரிவிக்கின்ற சிலம்பு அடிகள் சிலவற்றையும் காண்போம்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால்..."

என்னும் சிலப்பதிகார அடிகள், "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் — பெய்யெனப் பெய்யும் மழை" என்ற குறட்பாவை நினைவுறுத்துகிறது. "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்" கள் வனைக் கோறல் கடுங்கோ லன்று – வெள்வேற் கொற்றங்காண்" ,'நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே - கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்'' - என்கின்ற சிலப்பதிகார அடிகள்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்"
"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"
அன்றறிவாம் என்னாது அறம் செய்க - மற்றது
பொன்றுக்கால் பொன்றுத் துணை"—

என்கின்ற குறட்பாக்களை நினைவுறுத்துகின்றன.

முடிசூடும் மன்னனின் இலக்கணம் கூறினும், குடியாட்சி யின் பெருமையையும் கூறத்தவறவில்லை குறள்; முடியாட்சி இருந்த காலத்திலேயே குடிமக்களுள் ஒருத்தியாய கண்ண கியின் காற்சிலம்பு பற்றிய காப்பியம் செய்தும், ஆய்ச்சியர் குரவை, வேட்டுவவரி, முதலிய பகுதிகளால் நாட்டு மக்களை இடம் பெறச் செய்தும் குடியாட்சியின் பெருமையை விளக் கியது சிலம்பு.

குறளும் சிலம்பும் தமிழரின் பண்பாட்டை விளக்குகின் றன. வாழும் நெறிபற்றி அறிந்து கொள்ள விழைவாரும், வாழ்ந்த நிலைபற்றி எண்ண முயல்வாரும் குறளையும், சிலம்பை யும் படித்தல் வேண்டும். குறட்கருவூலமும். சிலம்புச் செல்வ மும் எந்நாட்டார்க்கும் கிடைக்கப் பெருத பெரு நூல்களா கும். தமிழர்கள் தன்னுட்டு இலக்கியங்களின் பெருமையை உணரத் தவறிவிட்டார்கள் என்பதைவிட, அறிந்தவர்கள் உணர்த்தத் தவறிவிட்டார்கள் எனக் கூறலே பொருந்தும். நல்லறிஞரையும், நல்ல நூல்களையும் பராட்டுகின்ற, போற்று கின்ற பழக்கம் எவ்வாறே நம் நாட்டாரிடமிருந்து சென்று விட்டது. பன்னுாண்டுகளாப் பாராட்டப் பெருதிருந்த குறளை யும் சிலம்பையும் பாட்டுத் திறத்தாலே பாரதி பாராட்டினன்; பாமர மக்களின் உள்ளத்திலே பதிய வைத்தான். "வள்ளு வன் தன்னை உலகினுக்கே தந்து – வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்றும், நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் என் ஞேர் - மணியாரம் படைத்த "தமிழ்நாடு" என்றும் கூறிப் பெருமை கொண்டான் பாரதி. இதிகாசங்களைப் பரப்பியது போல இந்தக் குறளையும், சிலம்பையும் நாட்டுமக்கள் உள்ளத்

# களவியல் உரை நலம்.

## (இரண்டாம் நூற்பா உரை)

(திருவாட்டி மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

க இரண்டாம் நூற்பா

"அதுவே
தானே அவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயி னொத்தல்

என வருவது இறையனர் களவியலின் இரண்டாம் நூற்பா மேலே, களவு ஒழுக்கமாவது, கந்தருவர் வழக்க மெனப் பிறர் தேயத்தே வழங்கப்படும் மணத்திெனடு ஒரு புடை யொப்புமை யுடைத்தென்று காட்டினர் இந்நூற்பா வான் அக்களவு ஒழுக்கத்திற்கு இலக்கணம் இயம்புவான் எடுத்துக் கொண்டார். இஃது இன்னதாதல் என்ற நக்கீரர் உரையாடல் இனிது பெறப்படும்.

உ தானே அவளே

"மேற் கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் ஒழுக்கம் களவு என்று வேண்டிற்றல்லது இன்ன இலக்கணத்தது என்றிலாதார், அதனை உணர்த்துதல் நுதலிற்று. இச்சூத்திரத்துட் நருதிய பொருள் மேலதனேடு இயையும்"

இனித் "தானே அவள்" என்ற தொடர்க்கு ஆசிரியர் நக்கீரர் தரும் விளககவுரை யாமாறு கீழேகாண்க. இதன் கண் பிறன்கோள் கூறி மறுத்தலும் தாஅனுட்டித்தனது நிறுத்தலும் உற்று நோக்கற்பாலன.

---

திலே பதியவைத்திருந்தால் தமிழும், தமிழரும் உலக அரங் கின் உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பர். நாட்டுப் பற்றையும், நலல மொழிப்பற்றையும் ஊட்டிருந்தால் ஒற்றுமையும் - ஒருமைப்பாட்டுணர்ச்சியும் தேவை என்று நாம் கூறத் தேவையில்லை. குறளின் கருத்தும், சிலம்பின் கொள்கையும் பரவினல் மக்கள் உயர்ந்த நெறியும்; சிறந்த பண்பாடும் பெறுவர். ஒற்றுமை வளரும்; உலகம் ஒன்று என்ற உணர்வு பிறக்கும்; ஊரும், நாடும் உலகமும் வாழும். பெற்ற தாயின் மீதும், பிறந்த பொன்னுட்டின் மீதும் சிறந்த பற்றுக்கொள்ள, மாறுபட்ட உள்ளங்களைப் பண்படுத்த, வேறுபட்டு வாழ்வோரை ஒன்றுபடுத்த உயர்ந்தவழி குறள் நெறியைப் பரப்புவதும், சிலம்புக் கருத்துக்களைக் கூறிச் சிறந்த உணர்வைப் பெருக்குவதுமேயாகும்.

வளர்க குறள்நெறி

"அதுவே என்பது—பண்டறி சுட்டு; மேற் சொல்லப் பட்ட கந்தருவ வழக்கய போலும் களவு என்றவாறு. தானே அவளே என்பது-தானே அவள் அவளேதான், என்பது என் சொல்லியவாறோ எனின் "தான் அவள்" என்னும் வேற்றுமை யிலர் என்றவாறு.

"இங்ஙனம் வாசகம் வேறுபடச் சொல்லப்பட்டா ராயினும், அன்பினாலும் குணத்தினாலும் கல்வியினாலும் உருவி னாலும் திரிபிலர் ஒருவரோடொருவர் என்பதாம். அஃது என் போலவே எனின்,—உருளரிசி, கொத்தமுரி என்றாற் போல எனின், அது பொருந்தாது. என்னை காரணம் எனின், கந்தருவ வழக்கத்தோடொக்கும் எனவே வேற்றுமையின்மை முடிந்தது. இன்னும் ஒருகால் வாசகம் வேறுபடுத்து அப் பொருளே சொல்லப் புனருத்தமாம். என்னை? ஒருபொருளை வேறுபட்ட வாய்பாட்டாற் பல்காற் சொல்லுவது புனருத்த மாகலின்.

"இனி ஒருவன் சொல்வது இவனும் பற்பல நூறாயிரவர் கூர்வேலிளைஞரொடு திரிதரினன்றித் தமியனாதலிலன், பெரிய னாதலால். இவளும் பற்பல் நூறாயிரவர் ஆயமகளிர் புடை சூழத் திரிதரினன்றித் தமியளாதலிலள் பெரியளாதலால். இங்ஙனமில்லாதான இவனும் இளைஞரினீங்கித்தானேயாய் இவளும் ஆயத்தினீங்கித் தானேயாய் இங்ஙனம் புணர்வர் என்ப. இவனை இளைஞரினீக்கியும் இவளை ஆயத்தினீங்கியும் பிரித்துக் கோடற்குங் "தானே அவளே" என்று சொல்லப் பட்ட தென்னும் இவ்வுரையும் பொருந்தாது. என்னோ காரணமெனின், க்ந்தருவ வழக்கத்தோடு ஒக்கு மெனவே, தமியராய்ப் புணர்தல் முடிந்தது, இன்னும் ஒருகால் அப் பொருளையே சொல்லம் புனருத்தமாம் என்பது.

"மற்று, என்னோ உரையெனின், தானே அவளே என்பது ஆண்பால்களுள் இவனோடு ஒத்தாருமில்லை மிக்காருமில்லை, குறைபட்டாரல்லது. எக்காலத்தும் எவ்விடத்தும் ஞானத் தாலும் குணத்தாலும் உருவினாலும் திருவினாலும் பொருவிலன் தானே என்பது இவளும் அன்னளெனவே இருவரும் பொரு விறந்தார் என்பதனைப் பயக்கும்.

"நின்ற ஏகாரம் ஐந்து ஏகாரத்துள்ளும் என்ன ஏகார மோ எனின் ஆண்குழுவின் இவனையே பிரித்து வாங்கினமை யானும், பெண்குழுவின் இவளையே பிரித்து வாங்கினமை யானும் பிரிநிலை ஏகாரம் எனப்பட்டது. பலவற்றுள் ஒன்று பிரிப்பது பிரிநிலை ஏகார மெனப்படு மாகலா னென்பது.

(தொடரும்)